**தமிழ்நாடு சிறுபான்மையினர்**
**பொருளாதார மேம்பாட்டுக் கழகம்**
**(தமிழ்நாடு அரசு நிறுவனம்)**

**சிறுபான்மையினர்:**
இசுலாமியர்கள்,
கிருஸ்துவர்கள்,
புத்தமதத்தினர், சீக்கியர்கள்
மற்றும் பார்சீயர்கள்

# கையேடு

கடன் உதவி திட்டங்கள் மற்றும் கடன் பெற வழிமுறைகள்

## டாம்கோ


807, அண்ணா சாலை, (5ம் தளம்),
சென்னை–600 002.

போன்: 2851 4846, பேக்ஸ்: 28515450


**தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்**
**(தமிழ்நாடு அரசு நிறுவனம்)**

தமிழ்நாட்டில் உள்ள சிறுபான்மையினர் வியாபாரம் மற்றும் தொழில் செய்து தங்களது வருமானத்தை பெருக்கி பொருளாதாரத்தில் மேம்பாடு அடையும் வண்ணம், தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் (டாம்கோ) 807, அண்ணா சாலை, (5–ம் தளம்) சென்னையில், 01.01.2000 முதல் செயல்பட்டு வருகிறது.

இக்கழகத்தின் மூலம் சிறுபான்மையினரின் சமூக பொருளாதார நிலையை மேம்படுத்தும் வகையில் கீழ்க்கண்ட திட்டங்களுக்கு குறைந்த வட்டியில் கடன் உதவி அளிக்கப்படுகிறது.

**தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி மற்றும் நிதி கழகம், புதுதில்லி**

இக்கழகம், 01.01.2000 முதல் தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி மற்றும் நிதி கழகத்தின் கீழ்க்கண்ட திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது.

| விவரம் | தேசிய கழக பங்கு தொகை | டாம்கோ பங்கு தொகை | பயனாளியின் பங்கு தொகை | மொத்தம் |
|---|---|---|---|---|
| தனி நபர் கடன் திட்டம் | 85% | 10% | 5% | 100% |
| சிறுகடன் திட்டம் | 90% | 10% | – | 100% |

**1. தனி நபர் கடன் திட்டம்:**

இத்திட்டத்தின் கீழ் வியாபாரம், சிறு தொழில் தொடங்கிடவும் மற்றும் அபிவிருத்தியடையவும் கடன் அளிக்கப்படுகிறது.

1. சில்லரை வியாபாரம் மற்றும் வியாபார அபிவிருத்தி.
2. கைவினைஞர் மற்றும் மரபுவழிச் சார்ந்த தொழில்கள் மற்றும் அபிவிருத்தி.
3. தொழில் மற்றும் தொழில் சேவை நிலையங்கள்.
4. போக்குவரத்து.
5. விவசாயம் தொடர்பான சிறு தொழில்கள்.

**2. தகுதிகள்:**

அ. பயனாளிகள்:- இசுலாமியர்கள், கிருஸ்துவர்கள், சீக்கியர்கள், புத்தமதத்தினர் மற்றும் பார்சீயர்கள் இனத்தை சார்ந்தவர்களாக இருக்க வேண்டும்.

ஆ. பயனாளிகள் வருட வருமானம் பின்வருமாறு இருக்க வேண்டும்.

கிராமப்பகுதியை சார்ந்தவர்களுக்கு ஆண்டு வருமானம் ரூ.39,500/–க்கு மேற்படாமலும், நகரப் பகுதியை சார்ந்தவர்களுக்கு ஆண்டு வருமானம் ரூ.54,500/–க்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

பயனடைவோரின் வயது 18ற்கு மேல் இருக்க வேண்டும்.

ஒரு குடும்பத்தில் ஒரு நபருக்கு மட்டுமே கடனுதவி வழங்கப்படும்.

**3. விண்ணப்பிக்கும் முறை:**

விண்ணப்பப்படிவம் இலவசமாக வழங்கப்படும். மாதிரி விண்ணப்பப்படிவங்களை கூட்டுறவு வங்கி கிளைகள், மண்டல கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் அலுவலகங்கள், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் அலுவலகம் மற்றும் சென்னையில் மேலே கண்ட முகவரியில் உள்ள டாம்கோ அலுவலகத்திலிருந்து இலவசமாக பெற்றுக் கொள்ளலாம் அல்லது இதற்கான விண்ணப்பப்படிவத்தினை வெளியில் ஒளிப்பட நகல் எடுத்தோ அல்லது தட்டச்சு செய்யப்பட்டோ பூர்த்தி செய்து சம்பந்தப்பட்ட மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலரிடமோ அல்லது சம்பந்தப்பட்ட கூட்டுறவு வங்கி கிளைகளிலோ அல்லது மண்டல கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளரிடமோ விண்ணப்பிக்கலாம்.

**4. அளிக்கப்பட வேண்டிய ஆவணங்கள்:**

சாதிச் சான்றிதழ் / பள்ளி சான்றிதழ் மற்றும் வருமான சான்றிதழ்
குடும்ப அட்டை / இருப்பிட சான்று
கடன் பெறுவதற்கான காரணம் (தொழில் விவரம்)
திட்ட அறிக்கை (பெரிய திட்டமாக இருந்தால் மட்டும்)
ஓட்டுநர் உரிமம்: (போக்குவரத்து வாகனங்கள் கடன் பெறுவதாக இருந்தால் மட்டும்)
வங்கி கோரும் ஆவணங்கள்.

**5. கடன் வழங்கும் முறை:**

விண்ணப்பிக்கப்பட்ட மனு மாவட்ட அளவிலான ஆய்வு மற்றும் தேர்வு குழுவின் ஒப்புதல் மற்றும் வங்கியின் பரிந்துரையை பெற்று டாம்கோ தகுந்த ஆணையை பிறப்பித்து கடன் தொகையை சம்பந்தப்பட்ட வங்கி மூலமாக வழங்கும்.

**6. கடன் தொகையின் அளவு:**

கடன் கோரும் திட்டத்தின் மதிப்பீடு ரூ.1,00,000/–க்கு உட்பட்டு இருந்தால் தகுதியின் அடிப்படையில் இக்கழகத்தில் ஒப்புதல் அளிக்கப்படும். கடன் தொகை ரூ.1.00 இலட்சத்திற்கு மேல் மற்றும் ரூ.5.00 இலட்சம் வரை தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி மற்றும் நிதிக் கழகத்தின் அனுமதி பெற்று கடன் வழங்கப்படும்.

போக்குவரத்து வாகன கடன்களுக்கு திட்ட மதிப்பீடு ரூ.3.48 இலட்சத்திற்கு உட்பட்டிருப்பின் வட்டி 10 சதவீதம் என்ற விகிதத்தில் கடன் வழங்கப்படும்.

**7. கடனுக்கு உத்திரவாதம்**

கடனுக்கு, வங்கியின் விதிமுறைகளுக்குட்பட்டு தகுந்த உத்திரவாதம் அளிக்க வேண்டும். பெறப்பட்ட கடன் தொகையின் மூலம் வாங்கப்படும் அசையும் மற்றும் அசையா சொத்துக்களையும் சம்பந்தப்பட்ட வங்கியில் அவர்கள் அடமானம் வைத்தாக வேண்டும்.

**8. வட்டி விகிதம் மற்றும் நிதியுதவி அளிக்கும் பங்கு தொகை:**

ஒரு பயனாளிக்கு அதிகபட்ச கடன் ரூ.1,00,000/– அனுமதிக்கப்படும். இதில் 5% பயனாளியின் பங்கு ஆகும் மீதமுள்ள 95% கடன் டாம்கோ நிறுவனத்தினால் வழங்கப்படும். இத்தொகையில் 85% தொகை தேசிய சிறுபான்மையினர் மேம்பாட்டுக் கழகத்தின் பங்கு ஆகும். இந்த கடன் தொகைக்கான ஆண்டு வட்டி வீதம் 6% சதவீதம் ஆகும். இதில் 3% வங்கிக்கு சேவை கட்டணமாக வழங்கப்படுகிறது.

**9. கடன் தொகையினை திருப்பிச் செலுத்துதல்**

கடன் தொகையை 60 மாத தவணைகளில் சம்பந்தப்பட்ட வங்கிகளுக்கு உரிய தேதியில் செலுத்திட வேண்டும். சிறுகடன்கள் 12/24/36 மாத தவணையில் செலுத்திட வேண்டும்.

**10. அபராத வட்டி**

தவணை தவறினால் வங்கியினால் நிர்ணயிக்கப்பட்ட அபராத வட்டி வசூலிக்கப்படும்.

**11. கறவை மாடு வாங்கிட ஆவின் மூலமாக கடனுதவி:**

கறவை மாடுகள் வாங்கிட ஆவின் மூலமாக கடன் உதவி பின்வருமாறு அளிக்கப்படுகிறது.

| கடன் விவரம் | கலப்பின பசுக்களுக்கான கடன் தொகை | உயரக முர்ரா எருது |
|---|---|---|
| ஒரு கறவை மாடு வாங்கிட | ரூ.25,000 | ரூ.35,000 |
| இரண்டு கறவை மாடுகள் வாங்கிட | ரூ.50,000 | ரூ.70,000 |

**12. கீழ்க்கண்ட நிதி நிறுவனங்கள் மூலமாக கடன் வழங்கப்படும்.**

மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள்
நகர கூட்டுறவு வங்கிகள்
தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள்
தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கி
தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம்
தேசியமயமாக்கப்பட்ட மற்றும் தனியார் வங்கிகள்.

**13. மறுநிதி உதவி திட்டம்:**

சிறுபான்மையினருக்கான கடன் திட்டங்களை விரைவுப்படுத்தும் பொருட்டு கூட்டுறவு வங்கிகளே கடன் மனுக்களைப் பெற்று, மனுக்களை கூர்ந்தாய்வு செய்த பின் தகுதியானவர்களுக்கு வங்கியின் நிதியிலிருந்து கடன் வழங்கிவிட்டு, டாம்கோ நிறுவனத்தின் விதிமுறைகளுக்குட்பட்டு மறு நிதியுதவி திட்டத்தில் மறுநிதி பெற்றுக் கொள்ள அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. மேலும் கூட்டுறவு வங்கிகள் அவை ஏற்கனவே வழங்கிய கடன்களுக்கான தொகையையும், தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி மற்றும் நிதிக் கழகத்தின் வரையறைக்குட்பட்டு டாம்கோ திட்டங்களின் கீழ் மறு நிதியுதவிகளை பெற்றுக் கொள்ள அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. இந்த நடைமுறைகள் சிறுபான்மையினர் தாமதமின்றி கடன் பெற மிகவும் உதவியாக இருக்கும்.

**14. சிறுபான்மையினர்களுக்கு ஆட்டோ தொழிற் கூட்டுறவு சங்கங்கள் மூலம் ஆட்டோ வாங்க கடன் வழங்கும் திட்டம்.**

இத்திட்டத்தின் கீழ் சிறுபான்மையினர்களுக்கு ஆட்டோ பெற்று, சுய தொழில் தொடங்கிட தொழில் கூட்டுறவு சங்கங்கள் மூலம் ஆட்டோ வழங்கப்படுகிறது. இத்திட்டம் தனிநபர் கடன் வழங்கப்படும் முறைகள் அடிப்படையில் வழங்கப்படுகின்றது. இந்த கடன் தாய்கோ வங்கி மூலம் அளிக்கப்படுகிறது.

இத்திட்டத்தின் சிறப்பு அம்சங்கள் கீழ்க்கண்டவாறு:–

1. இத்திட்டத்தில் பயன்பெறுபவர் சிறுபான்மையினராக இருக்க வேண்டும்.
2. பயனாளி ஆட்டோ வாகனம் ஓட்டுவதற்கான உரிமம் பெற்றிருக்க வேண்டும். இவரது குடும்ப ஆண்டு வருமானம் நகரமாயின் ரூ.54,500/– மற்றும் கிராமப்பகுதியாயின் ரூ.39,500/–க்கு மிகாமல் இருக்க வேண்டும்.
3. பயனாளிகள் ஒவ்வொரும் ரூ.800/– அல்லது ரூ.1000/– தொகையை பங்கு மூலதனமாக ஆட்டோ தொழிற் கூட்டுறவு சங்கத்திற்கு அளிக்க வேண்டும்.
4. பயனாளிகள் ஒவ்வொருவரும் இரண்டு ஆட்டோ ஓட்டுநரின் பிணையம் மற்றும் ரூ.5000/– வைப்பு தொகை செலுத்த வேண்டும்.
5. தாய்கோ வங்கியில் வைப்பு நிதியாக ரூ.5000/– செலுத்த வேண்டும். இதற்கு வட்டி உண்டு. தவணை தவறினால் வைப்பு நிதி ஈடுகட்டப்படும்.
6. டாம்கோவின் கடனை விட ஆட்டோ விலை அதிகமாக இருப்பின், தொழிற் கூட்டுறவு சங்கம் தாய்கோ வங்கியிடமிருந்து கடன் கோரலாம். தாய்கோ வங்கிக்கு பயனாளி கடனுக்கு முன்பணம் செலுத்த வேண்டும்.
7. ஆட்டோ கடன் தொகையில் 5 சதவீதத் தொகையை பயனாளிகள் பங்கு தொகையாக செலுத்த வேண்டும்.
8. ஆட்டோ தொழில் கூட்டுறவு சங்கம், உறுப்பினர் மற்றும் பயனாளிகளிடமிருந்து பிரதி மாத தவணை தொகையை வசூலித்து, தாய்கோ வங்கியில் செலுத்த நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.
9. ஆட்டோ தொழிற் கூட்டுறவு சங்கம், தொழில் மற்றும் வணிக துறையின் கட்டுப்பாட்டில் செயல்படும். தொழில் மற்றும் வணிகத்துறையின் கண்காணிப்பாளர், இச்சங்கத்தின் சிறப்பு அலுவலராக செயல்படுவார். மற்ற சிறுபான்மை இளைஞர்களும் இத்திட்டத்தில் பயன் பெறலாம்.
10. நான்கு வருடத்திற்கு தொடர் வைப்பு நிதியாக பிரதி மாதம் ரூ.500/– கட்ட வேண்டும்.
11. கடன் திரும்ப செலுத்தும் காலம் 4 வருடங்கள்.
12. வட்டி விகிதம் 6%.

**II. சுய உதவி குழுக்கள் மூலமாக சிறுகடன் திட்டம்**

சிறுபான்மை மக்கள் சுய உதவி குழுக்களை அமைத்து தனித்தனியாகவோ அல்லது சேர்ந்து சிறு வியாபாரம் / சிறு தொழில் செய்து தங்களது வருமானத்தை பெருக்கி வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திக் கொள்ளும் வண்ணம் குறைந்த வட்டியில் சிறுகடன் ரூ.25000/–க்கு மிகாமல் வழங்கும் சிறப்புமிகு திட்டம் டாம்கோ கழகத்தால் செயல்படுத்தப்படுகிறது.

**1. நிதியுதவி அளிக்கப்படும் சிறு தொழில்கள் / சிறு வியாபாரங்கள்**

நிதியுதவி அளிக்கப்படும் பல்வேறு சிறு தொழில்கள் / சிறு வியாபாரங்கள் பின்வருமாறு:

காய்கறி கடை, மீன் வியாபாரம், தையல் கடை, பூ வியாபாரம், பலகாரக் கடை, சிறு வியாபாரம் போன்றவை மற்றும் கைத்தொழில்கள்.

**2. தகுதிகள்**

பயனாளி, சிறுபான்மை சுயஉதவிக் குழுவில் அங்கத்தினராக இருத்தல் வேண்டும். மேலும், அந்த குழு குறைந்தது ஆறு மாதம் சேமித்தல் மற்றும் கடன் அளித்தல் பணியில் தொடர்ந்து நன்றாக செயல்பட்டு இருக்க வேண்டும்.

இசுலாமியர்கள், கிருஸ்தவர்கள், புத்தமதத்தினர், சீக்கியர்கள் மற்றும் பார்சீயர்கள் சிறுபான்மை வகுப்பை சார்ந்தவர்கள் ஆவார்கள்.

**3. சிறுபான்மை சுய உதவிக் குழு:**

75% சிறுபான்மையினர் அடங்கிய குழு சிறுபான்மை குழுவாக கருதப்பட்டு சிறு கடன் அளிக்கப்படும். 60% சிறுபான்மையினரும் 40% பிற்பட்டோர் / ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / ஊனமுற்றோர் அடங்கிய சுயஉதவிக் குழுவும் சிறுபான்மை சுயஉதவிக் குழுவாக கருதப்பட்டு எல்லா பயனாகிளுக்கும் சிறுகடன் அளிக்கப்படும்.

**4. சுய உதவி குழுவின் அங்கத்தினர் எண்ணிக்கை:**

சுய உதவி குழுவில் அதிக பட்ச அங்கத்தினர்கள் = 20
சுய உதவி குழுவில் குறைந்த பட்ச அங்கத்தினர்கள் = 10

**5. பெண்களுக்கு முன்னுரிமை:**

பெண்கள் சிறுபான்மை சுயஉதவி குழுக்கள், ஆண்கள் சிறுபான்மை சுயஉதவி குழுக்கள் மற்றும் ஆண்கள் மற்றும் பெண்கள் கலந்த சிறுபான்மை சுய உதவி குழுக்களுக்கு சிறுகடன் அளிக்கப்படும். பெண்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

**6. அதிக பட்ச சிறுகடன் மற்றும் வட்டி விகிதம்**

சிறுபான்மை சுய உதவிக்குழுவில் இருக்கும் ஒரு பயனாளிக்கு அதிகபட்ச கடன் ரூ.25000/– அளிக்கப்படும். இந்த கடனுக்கு ஆண்டு வட்டி விகிதம் 4%, இதில் 3% வங்கிக்கு சேவை கட்டணமாக வழங்கப்படுகிறது.

**7. மறுநிதி உதவி சிறு கடன் திட்டம் (சுழற்சி கடன்)**

ஏற்கனவே மற்ற திட்டங்களில் கடன் பெற்று கடன் நிறுவையிலுள்ள சிறுபான்மை சுயஉதவி குழுக்கள் இத்திட்டத்தில் கடன் பெற தகுதி அற்றவர்கள் ஆவார்கள். அந்த கடனை முழுமையாக திருப்பி செலுத்திவிட்டு டாம்கோ மூலம் சிறுகடனை பெறலாம். (Revolving Credit) சுழற்சி கடன் பெற்ற சுயஉதவி குழுக்கள் அந்த கடனை தங்கள் சேமிப்பில் அல்லது டாம்கோ சிறுகடனில் பிடித்தம் செய்திட உத்திரவாதம் அளித்து டாம்கோ சிறுகடனை பெறலாம். வங்கிகள் சிறுபான்மையினர் சுய உதவி குழுக்களுக்கு தங்கள் நிதியிலிருந்து கடன் அளித்து பின்னர் டாம்கோ கடனை பெறலாம்.

**8. கடன் தொகையினை திருப்பிச் செலுத்துதல்**

கடன் தொகைக்கு ஏற்ப 12/24/36 மாத தவணைகளில் பிடித்தம் செய்யப்படும்.

**9. அபராத வட்டி**

தவணை தவறினால் வங்கியினால் நிர்ணயிக்கப்பட்ட அபராத வட்டி வசூலிக்கப்படும்.

**10. வங்கியில் கணக்கு**

டாம்கோ சிறுகடன் பெற்றிட சுயஉதவி குழுக்களுக்கு வங்கியில் சேமிப்பு கணக்கு இருத்தல் அவசியம். டாம்கோ கடன் கூட்டுறவு வங்கிகள் மூலமாக அளிக்கப்படுவதால், சுயஉதவி குழுக்களுக்கு கூட்டுறவு வங்கியில் சேமிப்பு கணக்கு இருக்க வேண்டும். கூட்டுறவு வங்கியில் சேமிப்பு இல்லாத சுயஉதவிக் குழுக்கள் கூட்டுறவு வங்கியில் புதியதாக சேமிப்பு கணக்கு துவங்கலாம்.

**11. கடன் வழங்கும் முறை**

சிறுபான்மை சுய உதவி குழுக்கள் சிறுகடன் விண்ணப்பம் மற்றும் படிவம் அ–வினை கூட்டுறவு வங்கிகளுக்கு சமர்ப்பிக்க வேண்டும். மத்திய கூட்டுறவு வங்கி / நகர கூட்டுறவு வங்கி சுயஉதவிக் குழுக்களின் நிலையான தன்மை, கடனைத் திருப்பிச் செலுத்தும் திறமை போன்றவற்றை (Credit Rating) உறுதி செய்து, வங்கியின் பரிந்துரை (படிவம் அ) மற்றும் மாவட்ட ஆய்வு மற்றும் தேர்வு குழுவின் ஒப்புதலை டாம்கோ நிறுவனத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும். கூட்டுறவு வங்கியின் படிவம் அ மற்றும் மாவட்ட ஆய்வு மற்றும் தேர்வு குழுவின் ஒப்புதல் பெற்றவுடன் டாம்கோ தகுந்த ஆணையை பிறப்பித்து சிறுகடன் தொகையை நகர கூட்டுறவு வங்கி அல்லது மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மூலமாக வழங்கும்.

**12. சுய உதவி குழு அமைத்தல்**

சுயஉதவி குழுவை அமைத்திட மேலும் விவரங்களுக்கு மாவட்டத்திலுள்ள திட்ட அலுவலர், மகளிர் மேம்பாட்டு கழகம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட அரசு சாரா நிறுவனங்கள் (NGO)க்கள் அல்லது மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலரை அணுகவும்.

**13. தேசிய வளர்ச்சியில் அரசு சாரா நிறுவன பங்கு:**

தேசிய வளர்ச்சிக்காக சிறுபான்மை மக்கள் அரசு சாரா நிறுவனங்களை அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்படுகிறது மேலும் சுய உதவி குழுக்கள் அமைப்பதிலும் அதன் வளர்ச்சியிலும் அரசு சாரா நிறுவனங்கள் உதவ வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறது.

சுயஉதவி குழுக்களை அமைப்பது அவர்களை வழி நடத்துவது மற்றும் சுகாதார வசதியை செய்வது போன்ற நல்ல நடவடிக்கைகள் அரசு சாரா நிறுவனங்கள் செய்து கொண்டு இருக்கின்றன.

அரசு சாரா நிறுவனங்களை அமைப்பது மற்றும் சுய உதவி குழுக்கள் அமைப்பது மேலும் அவைகளை வழிநடத்துவது தொடர்பான விவரங்களுக்கு சிறுபான்மையினர் மக்கள், மாவட்டத்தில் உள்ள திட்ட அலுவலர், மகளிர் மேம்பாட்டுக் கழகம் / பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர், ஊரக வளர்ச்சி துறை வட்டார வளர்ச்சி அலுவலர் ஆகியோர்களை அணுகவும்.

ஊரக வளர்ச்சி துறையில் மகளிர் சுய உதவி குழுக்களுக்கு வழங்கப்படும் சலுகைகளை பெறுவதற்கு சிறுபான்மையினர் மக்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி துறை வட்டார அலுவலர்களை அணுகவும்.

மாவட்ட அளவில், திட்ட அலுவலர், மகளிர் மேம்பாட்டுக் கழகம் சிறுபான்மையினர் மகளிர் சுய உதவி குழுக்கள் அமைக்க ஊக்குவிக்கின்றது.

இச்சலுகைகளை பெறுவதற்கு சிறுபான்மையினர் மக்கள், மாவட்ட திட்ட அலுவலர், மகளிர் மேம்பாட்டு கழகம் அவர்களை அணுகவும்.